சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

# சுபீட்சம்

தினசரி பத்திரிகை : அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே!

www.supeedsam.com 2020.11.28 சனிக்கிழமை Email : supeedsam@gmail.com




## மட்டக்களப்பில் விளக்கேற்றி அஞ்சலி



கார்த்திகை 27 நேற்று மாலை 6.7 மணிக்கு மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பட்டிருப்பு தொகுதி இலங்கை தமிழரசுகட்சி தலைவருமான பா.அரியநேத்திரன் மண்முனைதென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் சி.புஷ்பலிங்கம் உள்ளிட்ட தமிழ்தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சுகாதார நடைமுறைகளை பேணி விளக்கேற்றி மௌன அஞ்சலி வணக்கம் 02>>

## முல்லைத்தீவில் வீடுகளில் சுடர் ஏற்றி அஞ்சலி



**(சண்முகம் தவசீலன்)**

2020ஆம் ஆண்டு மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்றையதினம் இராணுவம் ,பொலிஸார் ,புலனாய்வாளர்களின் கடுமையான அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் மக்களால் மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்ட்டிக்கப்பட்டுள்ளது. 02>>

## அம்பாறையில் நினைவேந்தல்



அம்பாறை மாவட்டத்தில் மாவீரர்களை நினைவேந்துவதற்கு நீதிமன்றங்களால் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் நினைவேந்தலை தனது வீட்டில் அனுஷ்டித்தார். பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் கொரோனா தனிமைப்படுத்தல் சட்டம் ஆகியவற்றைக் காரணம் காட்டி திருக்கோவில் பொலிஸார் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றிற்கு விடுத்த வேண்டுகோளுக்கு 02>>

## மன்னாரில் மாவீரர் தினம் வீடுகளில் அனுஷ்டிப்பு



**( வாஸ் கூஞ்ஞ)**

மாவீரர் தினமாகிய நவம்பர் 27ந் திகதி நினைவு கூறப்படும் இந்நாளில் வடக்கு கிழக்கு பகுதிகளில் மாவீரர் துயிலும் இல்லத்தில் உறவினர் அஞ்சலி செலுத்த நீதிமன்றம் தடைவிதித்தமையால் மாவீரர் குடும்பத்தினர் மற்றும் தமிழ் மக்கள் பலர் தங்கள் இல்லங்களிலும் சேமக் காலைகளிலும் 02>>

## கோவிட் 19 தொற்று அல்லது இறப்பு ஏற்பட்டால் இழப்பீடு

இலங்கை போக்குவரத்து பேருந்தில் பயணம் செய்யும் போது கோவிட் 19 தொற்று அல்லது இறப்பு ஏற்பட்டால் இழப்பீடு வழங்க சிறப்பு பாதுகாப்பு நிதியை அமைக்க இலங்கை போக்குவரத்து வாரியம் முடிவு செய்துள்ளது.

## கிழக்கில் மேலும் 5 கொரோனா தொற்றாளர்கள்



கிழக்கு மாகாணத்தில் நேற்று மேலும் 5 புதிய கொரனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் 02>>

## மட்டக்களப்பு கெம்பஸ் அரசுடமையாக்கப்படவுள்ளது

**கல்வியமைச்சர்**

முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்விற்கு சொந்தமான மட்டக்களப்பு 02>>




## வீட்டுக் கடன்களுக்கு அதிகபட்சம் 7% வட்டி மட்டுமே

**இலங்கை மத்திய வங்கி**

அனைத்து வணிக வங்கிகளுக்கும் சொத்துக்களால் பாதுகாக்கப்பட்ட வீட்டுக் கடன்களுக்கு அதிகபட்சம் 7% வட்டி மட்டுமே வசூலிக்குமாறு இலங்கை மத்திய வங்கி 02>>

## பாடசாலைகளில் கொவிட் 19 வைரஸ் பரவாமல் தடுக்க சுகாதார வழிகாட்டுதல் ஏற்பாடுகள்

பாடசாலைகளில் கொவிட்-19 வைரஸ் பரவாமல் தடுக்க சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதற்கான ஏற்பாடுகள் மிகவும் திருப்திகரமான மட்டத்தில் இருப்பதாக சுகாதார சேவைகளின் பிரதி பணிப்பாளர்டாக்டர் சூசி பெரேரா நேற்று தெரிவித்தார். டாக்டர் பெரேரா மேலும் கூறுகையில், பாடசாலைகளுடன் இணைக்கப்பட்ட 02>>

## பல்கலைக்கழகத்தை மீண்டும் திறப்பேன்

**எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்**



தற்போதைய கொரோனா விரிவாக்கம் முடிந்ததும் அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தைத் திறக்க நம்புவதாகக் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் 02>>

## இலங்கையின் 35 வது பொலிஸ்மா அதிபராக சந்தனா டி. விக்ரமரத்ன



இலங்கையின் 35 வது பொலிஸ்மா அதிபராக ஐ.ஜி.பி) நேற்று சந்தனா டி. விக்ரமரத்னே பொறுப்பேற்றுள்ளார். 35 வது பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்படுவதற்கு 02>>

**சிறைக்கைதிகளின் சிகிச்சை மற்றும் தடுப்பு நிலைமைகள்**

## அடிப்படை வாழ்க்கைத் தரத்தை விட குறைவு



சிறைக்கைதிகளின் சிகிச்சை மற்றும் தடுப்பு நிலைமைகள் அடிப்படை வாழ்க்கைத் தரத்தை விடக் குறைவாக இருப்பதாகக் 02>>

## மாணவர்களுக்கு உறவுகள் வீடுகளில் அஞ்சலி



**(சண்முகம் தவசீலன்)**

ஜயன்கன்குளம் பகுதியில் கடந்த 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி இலங்கை இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையினரின் நோயாளர் காவு வண்டி மீது நடத்திய கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்த மாணவர்கள் உள்ளிட்ட 8 பேரின் 13 ஆம் ஆண்டு நினைவு நினைவு தினம் இன்றாகும் 02>>

## 12 அறைகளைக்கொண்ட லயன்குடியிருப்பில் முழுமையாக தீ



**(க.கிஷாந்தன்)**

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிவ்வெளிகம தோட்டத்தின் தொழிற்சாலை 02>>







# டிப்பர் வாகனத்துடன் முச்சக்கரவண்டி நேர்க்கு நேர் மோதியதில் இருவர் படுகாயம்



(எப்.முபாரக் பொன் ஆனந்தன்)

திருகோணமலை-ஹொரவ்பொத்தானை பிரதான வீதி துவரங்காடு சந்தியில் டிப்பர் வாகனம் துடன் முச்சக்கரவண்டி நேர்க்கு நேர் மோதியதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்று(27) 1. 30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கன்னியாவில் இருந்து திருகோணமலை நோக்கி வேகமாக வந்த முச்சக்கரவண்டி நேராக வந்த டிப்பர் வாகனத்துடன் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றதாகவும் முச்சக்கர வண்டியில் பயணித்த இருவர் படுகாயமடைந்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

இவ்வாறு படுகாயமடைந்தவர்கள் திருகோணமலை- மட்டிக்களி, ராஜவரோதய சதுக்கம் பகுதியைச் சேர்ந்த மணிவண்ணன் ஜதுர்ஷன் (19 வயது) மற்றும் உவர்மலை மத்திய வீதியைச் சேர்ந்த ஜீவராசா
கலை நேசன் (24வயது) எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

இதுவிபத்துடன்தொடர்புடையசாரதியை கைது செய்துள்ள நிலையில் முச்சக்கரவண்டி வேகக் கட்டுப்பாட்டை இழந்து டிப்பர் வாகனத்துடன் மோதியதினாலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் விபத்து தொடர்பில் உப்புவெளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொகவந்தலாவ பகுதியில் 06 பேருக்கு கொரோனா தொற்று உறுதி



(க.கிஷாந்தன்)

பொகவந்தலாவ சுகாதா வைத்திய அதிகார பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் ஆறு பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனார்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளவர்கள் கொட்டியாகலை கீழ்பிரிவு, டிக்கோயா டில்லரி தோட்டம், நோர்வூட் வெஞ்சர் தோட்டம், பொகவந்தலாவ செல்வகந்தை தோட்டம், பொகவந்தலாவ பொகவான தோட்டம், பொகவந்தலாவ மோர ஆகிய தோட்டங்களை சேர்ந்த 52,32,21,26 வயதுடையவர்கள் என்றும் இவர்கள் கொரோனா சிகிச்சை முகாம்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் சுகாதார பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

தொற்றுக்குள்ளான மேற்படி ஆறு பேரும் கொழும்பு புறக்கோட்டை, புளூமெண்டல், பம்பலப்பிட்டி போன்ற பகுதிகளிலிருந்து கடந்த 17ம் திகதி தமது வீடுகளுக்கு வருகை தந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து பொகவந்தலாவ பகுதிக்கு வருகை தந்தவர்களிடம் கடந்த 24 ம் திகதி எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட 46 பேரிடம் மேற்கொண்ட பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கை நேற்று (26) திகதி வெளியானதனை தொடர்ந்து இவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனவே குறித்த பகுதியிலுள்ள மாணவர்கள் ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு சமூகமளிக்க வேண்டாம் என அட்டன் வலயக்கல்விப்பணிப்பாளர் பி.ஸ்ரீதரன் கோரிக்கை விடுத்துள்ளார். இனங்காணப்பட்ட தொற்றாளர்களின் குடும்பங்கள் மற்றும் அவர்களிடம் நெருக்கமான உறவு வைத்திருந்த குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதே வளை பொகவந்தலாவையில் உள்ள பாசாலைகளில் மிகவும் குறைந்தளவு மாணவர்களே வருகை தந்துள்ளதாகவும் ஒரு பாடசாலை மாணவர்களை வீட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




# ஓட்டமாவடி பிரதேச சபையின் 2021ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றம்



(ந.குகதர்சன்)

ஓட்டமாவடி பிரதேச சபையின் 2021ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பெரும்பான்மையாக பதினாறு வாக்குகளினால் இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. ஓட்டமாவடி பிரதேச சபையின் 2021ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபரினால் மக்கள் பிரதிநிதிகளின் அங்கீகாரத்திற்காக சபை அமர்வின் போது வாசித்து சமர்ப்பிக்கப்பட்டது. இப்பாதீடு அரசியல், கட்சி வேறுபாடுகளுக்கப்பால் அதிகபட்சமான உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வரவு செலவுத் திட்டத்திற்கு நேரடி ஆதரவாக 13 வாக்குகளும், சில திருத்தங்களுடன் ஆதரவாக 3 வாக்குகளும் மொத்தமாக 16 உறுப்பினர்களால் ஆதரவாக வாக்களிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதுடன், இப்பாதீட்டுக் கெதிராக இரண்டு உறுப்பினர்களால் வாக்களிக்கப்பட்டனர். 17 உறுப்பினர்கள் சபைக்கு நேரடியாக சமூகமளித்ததுடன், ஒரு உறுப்பினர் சுகவீனம் காரணமாக எழுத்து மூலம் தனது ஆதரவினை பாதீட்டிற்கு வழங்கி இருந்தார்.

நாட்டில் நிலவும் நெருக்கடி நிலைமைகளால் அரசாங்கத்தின் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதைப் போல் இப்பிரதேச சபைக்கான வருமான மூலங்களும் பாரிய இழப்புக்களை சந்தித்துள்ளன. கட்சி வேறுபாடுகளுக்கப்பால் இன்றைய சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு இப்பிரதேசத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடன் இப்பிரதேச சபையின் 2021ம் ஆண்டுக்கான இப்பாதீட்டிற்கு தமது மேலான ஆதரவினை வழங்கிய அனைத்து உறுப்பினர்களுக்கும் சபையின் தவிசாளர் இப்பிரதேச சபை மற்றும் இப்பிரதேச மக்கள் சார்பாகவும் தனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்.

# 200 கிராம் சி4 வெடிமருந்துடன் புதுக்குடியிருப்பில் இருவர் கைது

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பொலிஸ் பிரிவுக்குட்ப்பட்ட இரண்டு இளைஞர்கள் 200 கிராம் சி 4 வெடிமருத்துடன் கைது செய்யப்பட்டுள்ளனர். வனப்பகுதி ஒன்றில் இருந்து குறித்த சி 4 வெடிமருத்துகளை மீட்டதாகவும் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் தப்பி சென்றுள்ளதாகவும் இரண்டு இளைஞர்கள் 200 கிராம் சி4 வெடிமருத்துடன் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது. கைது செய்யப்பட்டவர்கள் உடையார்கட்டு பகுதியை சேர்ந்தவர்கள் என அறியமுடிகிறது சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

## சுடரேற்றி அஞ்சலி



கிழக்குச் சூரியன்
PAGE 04 28 NOVEMBER 2020, SATURDAY

# கல்முனை கிரீன் பீல்ட் குடிநீர் நிலுவை கட்டணம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு!



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கிரீன் பீல்ட் சுனாமி குடியேற்ற வீட்டுத்திட்டத்தில் குடிநீர் கட்டணம் அதிகரித்துள்ளமை சம்பந்தமாக பிரேரணை ஊடாக கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எம். நிசார் ஜே.பி அவர்கள் வேண்டிக் கொண்டதற்கிணங்க கல்முனை மாநகரசபை மேயர் சட்டத்தரணி ஏ.எம். றக்கீப் அவர்களின் வேண்டுதலின் பிரகாரம் கல்முனை மாநகரசபை பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர் அவர்களின் தலைமையில் நேற்று (27) கல்முனை பிரதேச செயலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மக்கள் முகம் கொடுக்கும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் குடிநீர் பாவனை நீர் பட்டியல் நிலுவை தொகை அதிகரித்து காணப்படுவதினை சீர்படுத்தும் முகாமைத்துவம் சம்பந்தமான கலந்துரையாடலாக இது அமைந்திருந்தது.

இக்கூட்டத்தில் கல்முனை பிரதேச செயலாளர் ஏ.எல்.எம். நசீர் மற்றும் கல்முனை பிரதேச செயலக கணக்காளர் ஹபிபுல்லாஹ் மற்றும் கல்முனை மாநகர சபை கௌரவ உறுப்பினர்களான ஏ.எம். நிசார் மற்றும் ஏ.சி.எம்.சத்தார் மற்றும் சட்டத்தரணி ஆரியா காரியப்பர் கலந்து கொண்டதுடன் கல்முனை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை பிராந்திய முகாமையாளர் பாவா மற்றும் தேசிய நீர் வழங்கல் கல்முனை பிரதேச பொறியியலாளர் எம்.எம்.பாயிக் கல்முனை தேசிய நீர்வழங்கல் நிலைய பொறுப்பதிகாரி எம்.எம்.முனைவர் மற்றும் கல்முனை கிரீன்பீல்ட் வீட்டுத்திட்ட தற்போதைய கமிட்டி தலைவர் ஏ.சி.கலிலுர் ரஹ்மான் மற்றும் கபூல் ஆசாத் ஹாஜி மற்றும் முக்கியஸ்தர்கள் பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

காலா காலம் நீண்டு சென்று தற்போது சர்ச்சைக்குள்ளாகி இருக்கும் இந்த குடிநீர் நிலுவைத் தொகை அதிகரித்துக் கொண்ட பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக அங்கு குடியிருக்கும் சுமார் 440 குடும்பங்களுக்கும் நிரந்தர தீர்வினை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் கூட்டம் இடம்பெற்றது.

இதில் கல்முனை மாநகரசபை பிரதி மேயர் ரஹ்மத் மன்சூர் இப்பிரச்சினைக்கு கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் தற்போதைய நிலைப்பாடு இதன் சாதக பாதகங்கள் என்ன என்பதை தெளிவுபடுத்தினார்.

அதனைத் தொடர்ந்து கல்முனை பிரதேச கணக்காளர் கௌரவ ஹபிபுல்லாஹ் அவர்களினால் இதற்கான கணக்கு அறிக்கைகள் மற்றும் தற்போது தேவைப்படும் நிலுவைத் தொகைகள் இவ்வாறான மதிப்பீடுகள் அங்கு வந்தவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

மேலும் அங்கு வந்த தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை உயரதிகாரிகளும் இதற்கான பூரண ஒத்துழைப்பினை வழங்க உள்ளதாகவும் கூறிக் கொண்டதுடன் இதன்போது திடமான முடிவினை எடுக்கும் பிரகாரம் பிரதேச செயலாளரின் பூரண கண்ணோட்டத்தில் அவரது வழிகாட்டலில் கணக்காளர் நியமிக்கும் நீர் மானிவாசிப்பாளர்களைக் கொண்டு இதற்கான பணத்தினை சமுர்த்தி வங்கியில் புதிய கணக்கொன்றினைத் திறந்து அதில் வைப்பிலிட்டு அதனை மூலம் பிரதேச செயலாளர் மூலமாக தேசிய நீர்வழங்கல் அலுவலகத்திற்கு எந்த தடங்கலும் இல்லாமல் மாதாந்த கட்டணத்தினை வழங்குவதற்கு தீர்மானம் எடுத்து ஏகமனதாக அனைவரது பூரண சம்மதத்துடன் உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது.

# இலங்கையராக ஒன்றிணைவதன் மூலமே நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும்

மட்டு. மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் உப தலைவர்

(ந.குகதர்சன்)



தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவமளித்து ஒரு நாடு ஒரே நாட்டு மக்கள் என்ற முனைப்போடு இலங்கையராக ஒன்றிணைவதன் மூலமே எமது நாட்டை மீண்டும் நாம் கட்டியெழுப்ப முடியும் என கல்குடா மீடியா போரத்தின் பணிப்பாளரும் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் உப தலைவரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம்.பாரிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளிலிருந்து பணத்தைப்பெற்று சர்வதேச நாடுகளின் நிகழ்ச்சி நிரலில் இயங்கும் சமூக விரோதிகளை மக்கள் அரசுக்கு அடையாளங்காட்ட வேண்டும்.

இவ்வாறான சமூக விரோதிகளாலேயே அன்னியர்களின் ஊடுருவல் சமூகங்களுக்கிடையே குழப்பங்களை ஏற்படுத்துவதன் மூலம் தீவிரவாத சிந்தனைகள் நாட்டுக்குள் வளர்க்கப்படுகிறது. இதனை முற்றாக இல்லாதொழிப்பது தாய் நாட்டை நேசிக்கும் ஒவ்வொருவரினதும் கடமையும் பொறுப்புமாகும்.

கடந்த மூன்று தசாப்த காலமாக இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக இந்த நாடு ஏராளமான இழப்புக்களையும் பேரழிவுகளையும் சந்திக்க நேரிட்டது.

இந்நிலையில், அன்று நாட்டைப் பொறுப்பேற்ற தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஒரு துணிச்சல்மிக்கவர் என்பதை நிரூபித்தார். சர்வதேசப் பயங்கரவாதிகளாக அடையாளப்படுத்தப்பட்ட விடுதலைப்புலிகள் (LTTE) கூண்டோடு அழித்தொழிக்கப்பட்டனர்.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் இந்த நாடு மக்கள் கண்டிராத அபிவிருத்திகளை நோக்கிப்பயணித்தது. வடக்கின் வசந்தம், கிழக்கின் எழுச்சி என்ற அடிப்படையில் யுத்தத்தின் கோரப்பிடிகளுக்குள்ளிருந்த மக்களின் வாழ்வில் முன்னேற்றம் காணப்பட்டது. சாதாரண மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றிக் கொடுக்கப்பட்டன.

இனங்களுக்கிடையிலான நல்லுறவுகள் அன்றைய ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் மஹிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் கட்டியெழுப்பப்பட்டது.

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் இயலாமை, கட்சிகளுக்குள் ஏற்பட்ட குழப்பங்கள், பலவீனமான ஆட்சியினால் தேசிய பாதுகாப்பு பலவீனமடைந்து காணப்பட்டது. இதனாலேயே யுத்தத்தின் பின்னர் அமைதிப் பூங்கா வனமாக இருந்த எமது நாட்டை சர்வதேச நாடுகளின் வலைப்பின்னலில் பயங்கரவாதி சஹ்ரானால் மீண்டுமொரு பேரழிவு ஏற்படுத்தப்பட்டது.

இதனால் இந்நாட்டில் தலைநிமிர்ந்து வாழ்ந்த முஸ்லிம் சமூகத்தவர்கள் மீது சந்தேகப் பார்வையை ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் சர்வதேச நாடுகளின் சூழ்ச்சியேயன்றி வேறில்லை.

எமது நாடு அழிவின் பாதையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் மீண்டும் எமது நாட்டை அந்நியர்களின் கெடுபிடிகளிலிருந்து காப்பாற்றி, தேசியப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுஜன பெரமுன கட்சி குறுகிய காலத்தில் இந்நாட்டு மக்களின் அபிமானத்தைப் பெற்று பலமான அரசாங்கத்தை நிறுவியுள்ளது.

மேலும், எமது நாட்டை மீண்டும் வளமான நாடாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டல், ஆசீர்வாதத்துடன் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அரசாங்கம் மக்கள் நலனைக் கருத்திற்கொண்டு மேற்கொண்டு வரும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தினை வெற்றி கொள்ள வேண்டுமாயின், தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவமளித்து ஒரு நாடு ஒரே நாட்டு மக்கள் என்ற முனைப்போடு இலங்கைத்தாயின் பிள்ளைகளாய் நாமனைவரும் ஒன்றிணைவதன் மூலமே அனைத்து வளங்களையும் கொண்ட எமது நாட்டை மீண்டும் அமைதியான பாதுகாப்புமிக்க நாடாக கட்டியெழுப்ப முடியுமென்பதில் எவ்வித ஐயமுமில்லை எனத் தெரிவித்துள்ளார்.

# கொவிட் ஜனாஸாக்களை பாதுகாப்பாக அடக்கம் செய்வது எப்படி?

(சர்ஜுன் லாபீர்)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழக்கும் சடலங்களை அடக்கம் செய்ய முடியும் என பொறியியலாளர்கள் குழுவினரினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆய்வுகளை அடிப்படையாக வைத்து பொறியியலாளர் குழுவொன்றினால் தயாரிக்கப்பட்ட விசேட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழக்கும் சடலங்களை எவ்வாறாறு அடக்கம் செய்ய வேண்டும் எனவும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொறியியில் துறையில் கலாநிதி பட்டம் பெற்றுள்ள கலாநிதி ஏ.டப்ளியூ.எம். றஸ்மி, கலாநிதி ஏ.எம்.எம்.சியாத், கலாநிதி எம். சீ.எம்.நஸ்வி, கலாநிதி ஏ.எம்.ஏ. சஜா, கலாநிதி எஸ்.எம்.ஜுனைதீன் மற்றும் பொறியியலாளர் எம்.சீ. றியாஸ் ஆகியோர் இணைந்தே இந்த அறிக்கையினை தயாரித்துள்ளனர்.

ஜனாஸாக்களை அடக்கம் செய்வது தொடர்பில் கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ள அரச மற்றும் சிவில் அமைப்புக்களிற்கு உதவும் வகையில் கடந்த மே மாதம் இவ்வழிகாட்டல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.



இதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் கொவிட் - 19 இனால் மரணித்த உடல்களை அடக்கம் செய்வதற்கான பொதுவான வழிகாட்டல்களாகும்.

குறித்த அறிக்கையின் சுருக்கம்:

கொவிட் - 19 இனால் மரணமடைந்தவர்களின் இறந்த உடல்களை பாதுகாப்பான முறையில் முகாமைத்துவம் செய்வதற்காக உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டியில் அடக்கம் செய்வதை அல்லது தகனம் செய்வதை அனுமதிக்கின்றது.

இலங்கையில் கொவிட் - 19 உடன் உடல்களைக் கட்டாயமாகத் தகனஞ் செய்வது சமய மற்றும் கலாசாரப் பாரம்பரியங்கள் காரணமாக நல்லடக்கம் செய்வதனை வழக்காகக் கொண்டிருக்கின்ற மேலதிக ஆழ்ந்த துன்பத்தினை உண்டுபண்ணுகின்றது.

கொவிட் - 19 இனால் தொற்றுக்குள்ளானவர்களின் இறந்த உடல்களை அடக்கம் செய்வது தொடர்பில் எழுப்பப்பட்ட பிரதான அக்கறைகள் இறந்த உடல்களைப் அடக்கம் செய்வதில் உள்ள தவறான முகாமைத்துவம்ஃபாதுகாப்பற்ற செயற்பாடுகள், நில நீருடன் மாசுபடுவதற்கான சாத்தியத்தன்மை என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

தற்போது காணப்படும் விஞ்ஞான ரீதியான ஏடுகள் மற்றும் எழுத்துகள், கொவிட் - 19 நோயாளிகளைக் கையாளுவது தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச வழிகாட்டு நெறிகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்வறிக்கை பின்வரும் பிரதான அக்கறைகளைக் கையாளுகின்ற கொவிட் - 19 னால் தொற்றுக்குட்பட்டவர்களின் இறந்த உடல்களை பாதுகாப்பாக அடக்கம் செய்வதற்கான செயற்பாட்டு ரீதியான நடவடிக்கைமுறைகளின் தொகுதியொன்றை முன்வைக்கின்றது.

**சாதாரன அடக்கம் செய்வதற்கான சடங்குகளிலிருந்து வேறுபாடுகள்:**

- இறந்த உடல் உறவினர்களிடம் வழங்கப்படமாட்டாது (இறந்த உடல்களை பயிற்சிபெற்ற ஆளனியினர் மாத்திரம் கையாள வேண்டும்.
- இறந்த உடல் கழுவப்படாது, பாரம்பரிய ரீதியான ஆடையிடல் இராது. மட்டுப்படுத்தப்பட்டவர்கள் மாத்திரமே பார்வையிட முடியும்.
- உறுஞ்சும் பொருட்கள் உடலின் கீழ் வைக்கப்பட வேண்டும். அத்துடன். இறந்த உடல் முதலாவது உடல் பையினுள் வைக்கப்பட வேண்டும்.
- இரண்டாவது உடல் பையினால் உடலைச் சுற்றி பொறியிடல் வேண்டும்
- ஒவ்வொரு உடல் பையினதும் வெளிப் பகுதியில் கிருமித் தொற்றுநீக்கிகளைப் பிரயோகித்தல் வேண்டும்
- பெட்டியினுள் வைப்பதுடன் வைத்தியசாலையில் ஒரு முறை பொறியிடப்பட்டு வைக்கப்பட்ட பெட்டி திறக்கப்படக் கூடாது
- அதிகாரிகளினால் அதிகாரமளிக்கப்பட்ட வாகனங்களில் மாத்திரமே அடக்கம் செய்யப்படும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

**அடக்கம் செயய்ப்படும் இடம் மற்றும் அடக்கம் செய்யப்படும் முறையைத் தெரிவு செய்தலும் பின்வரும் விதிமுறையினைப் பின்பற்றலும்:**

- ஏதேனும் நீர் ஊற்று அல்லது நீர்வழிகளிலிருந்து ஆகக் குறைந்தது 30 மீற்றர் தூரத்தில், ஏதேனும் புல வடிகாலிருந்து 10 மீற்றர் தூரம், குடிநீருக்காக பயன்படுத்தப்படும் ஏதேனும் நிலநீர் முலங்களிலிருந்து 250 மீற்றர் தூரம், அண்மையிலுள்ள வசிக்கும் கட்டடத்திலிருந்து 500 மீற்றர் தூரம்
- நில மேற்பரப்பிலிருந்து 3.3 மீற்றரை விட ஆழமான நிலநீர் மட்டத்தைக் கொண்ட இடங்கள்
- நில நீர் மட்டம் நில மேற்பரப்பிலிருந்து 3.3 மீற்றரை விட ஆழமற்றதாக இருக்குமிடத்து, தேவையானளவு சுற்றுவட்டச் சுவர் ஒன்றின் மூலம் எல்லைக்குட்படுத்தப்பட்ட பொருத்தமான மண்ணால் நிரப்பப்படுவதன் மூலம் தேவையான அளவுக்கு நில மட்டம் அதிகரிக்கப்பட முடியும்
- நில மட்டத்திலிருந்து அடக்கம் செய்யப்படும் குழிப்பகுதியின் அடி வரை உள்ள ஆகக் குறைந்த ஆழம் 1.8 மீற்றர் ஆகும்.
- அடக்கம் செய்யப்படும் குழிப் பகுதி வரையறுக்கப்பட்டளவு உடனடுத்துக் காணப்படும் குடும்ப உறுப்பினர்களுக்காக மாத்திரம் பாதுகாப்பிடப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் பயிற்சிபெற்ற ஆளனியினர் மாத்திரம் அடக்க செயன்முறையைக் கையாள வேண்டும். அடக்கம் செய்யப்படும் புதைகுழிப் பகுதிகள் அடையாளங்காணும் மற்றும் கண்டுபிடிக்கும் நோக்கங்களுக்கான தெளிவாக எல்லையிடப்பட்டிருக்க வேண்டும்.

WWW.SUPEEDSAM.COM

# கந்தளாயில் கிழக்கு மாகாண ஆளுனரின் செயலாளருக்கும், கால்நடை வளர்ப்பாளர்களுக்குமிடையிலான சந்திப்பு

(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாயில் கிழக்கு மாகாண ஆளுனரின் செயலாளருக்கும்,கால்நடை வளர்ப்பாளர்களுக்குமிடையிலான சந்திப்பு கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஏ.சி.எம். ஜவாஹிரின் ஏற்பாட்டில் கந்தளாய் அல் தாரிக் மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. கந்தளாய் , முள்ளிப்பொத்தானை,மற்றும் தம்பலாகாமம் மக்கள் நீண்ட காலமாக மேய்ச்சல் தரையின்றி கால்நடைகளை பராமரிப்பதில் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும்,தமக்கு மேய்ச்சல் தரைக்கான பகுதியினை எல்லையிட்டு தருவதோடு,மேய்ச்சல் தரைகளில் வேளாண்மை செய்வது மற்றும் சேனைப் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்வது போன்றவற்றினை நிறுத்துமாறும் கால் வளர்ப்பாளர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டது.



கந்தளாய், தம்பலகமம் பிரதேச மேய்ச்சல் நிலமாக மூன்று பிரதேசங்கள் இனங்காணப்பட்டு கால் நடை வளர்ப்பாளர்கள் ஒரு இடத்தினை தெரிவு செய்தல்,கிண்ணியா கால் வளர்ப்பாளர்களுக்கு வேறு பகுதியை தெரிவு செய்வது, தெரிவு செய்யப்பட்ட காணிகளை வர்த்தமானியில் பிரசுரித்து அக்காணிகளை முழுமையாக வேலியடைத்துக் கொடுத்தல். கால் நடை வளப்பாளர்களுக்காக சங்கம் உருவாக்கி விஷேட விலையில் அரசு பால் கொள்வனவு செய்தல், மற்றும் பண்ணையாளர்களுக்காக சுய தொழில் ஏற்பாடு செய்தல்,போன்ற செயற்பாடுகளை தாம் கூடிய விரைவில் கிழக்கு மாகாண ஆளுனர் அனுராத யகம்பத்துடன் கலந்துரையாடி தாம் மேற்கொண்டுதருவதாகவும்வாக்குறுதியளித்தார். இதன் போது கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஏ.சி.எம்.ஜவாஹிரினால் மகஜர் ஒன்றும் கிழக்கு மாகாண ஆளுனரின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

# மக்களுக்கான சேவைகளை வழங்கத் தேவையான திட்டங்கள் உள்ளடக்கப்படவில்லை

(ந.குகதர்சன்)





மக்களிடமிருந்து பெறப்படும் வரிப்பணத்தினைக் கொண்டு மக்களுக்கான சேவைகளை வழங்கத் தேவையான திட்டங்கள் உள்ளடக்கப்படவில்லை என ஓட்டமாவடி பிரதேச சபை உறுப்பினர்களான எம்.ஐ.ஹாமித் மௌலவி, ஏ.ஜி.அஸீஸ்/ல் றஹீம் ஆகியோர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். பிரதேச வட்டாரங்களைச் சார்ந்து சமூக நலன் கருதாத வரவு செலவுத்திட்டம் என்பதன் காரணமாகவே எதிராக வாக்களித்தோம் என ஓட்டமாவடி பிரதேச சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களான எம்.ஐ.ஹாமித் மௌலவி, ஏ.ஜி.அஸீஸ்/ல் றஹீம் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

ஓட்டமாவடி பிரதேச சபையின் 2021ம் ஆண்டுக்கான 3வது வரவு செலவுத்திட்டம் தவிசாளர் ஏ.எம்.நௌபரினால் சபையில் முன்வைக்கப்பட்டது. இதன்போது இடம்பெற்ற வாக்களிப்பில் ஆதரவாக 12 வாக்குகளும் எதிராக 2 வாக்குகளும், மூவர் திருத்தங்களுடன் ஆதரிப்பதாகவும் தெரிவித்த நிலையில், பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. வாக்களிப்பில் கலந்து கொண்ட பின்னர் நாம் ஏன் எதிர்த்து வாக்களித்தோம் என்பது தொடர்பில் இன்று கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டனர். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

2021ம் ஆண்டு பாதீடு சமர்ப்பித்தல் என்பதாகவே கடந்த 18.11.2020ம் திகதியிடப்பட்டு அனுப்பப்பட்ட சபை அமர்வுக்கான அழைப்பில் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், இன்றே வரவு செலவுத்திட்டத்தினைச் சமர்ப்பித்து வாக்களிப்பை நடாத்தி முடித்துள்ளமை உள்ளூராட்சி மன்ற கட்டளைச் சட்டத்தை மீறி தவிசாளர் தன்னிச்சையாகச் செயற்பட்டுள்ளார். அத்தோடு, மக்களிடமிருந்து பெறப்படும் வரிப்பணத்திலிருந்து மக்களுக்கு நன்மையளிக்கும் எந்தவிதத் திட்டங்களும் குறித்த வரவு செலவுத்திட்டத்தில் வட்டார மக்களை மையமாகக் கொண்டு சமூக நலன் சார்ந்து உள்ளடக்கப்படவில்லை என்பதாலேயே நாங்கள் இருவரும் எதிர்த்து வாக்களித்தோம்.

பிரதேசத்தில் திடீர் அனர்த்தங்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களிலோ அல்லது இப்பிரதேசத்தில் தொழில் மேம்பாடுகளை முன்னெடுத்தல் தொடர்பாகவோ பிரதேச கல்வி, கலாசார அபிவிருத்தி தொடர்பிலோ எந்தவொரு முன்னேற்றகரமான விடயத்தையும் குறித்த வரவு செலவுத்திட்டம் உள்ளடக்கவில்லை என்பது கவலையளிக்கின்ற விடயமாகும். அத்துடன், நிதி வருமானங்களைப் பெற்று பிரதேச சபையின் அதிகாரங்களுக்குட்பட்ட வகையில் அபிவிருத்திகளை முன்கொண்டு செல்லத் தேவையான எந்தவொரு முன்மொழிவுகளையோ கொண்டிருக்கவில்லை.

தமது கதிரையைப் பாதுகாத்துக் கொள்ளவும் நிறுவனத்தை கொண்டு நடாத்த வேண்டும் என்பதற்காக வழமையாக சம்பிரதாய அடிப்படையில் வரவையும் செலவையும் குறிப்பிடுகின்ற ஒரு கணக்கறிக்கை போன்றே குறித்த வரவு செலவுத்திட்டம் காணப்படுவதுடன், அதனை ஆதரித்தோர் தமது சொந்த நலனுக்காகவும் தமக்கு ஏதாவது கிடைக்கும் என்பதற்காகவும் அல்லது தவிசாளர் தனக்கு அநியாயங்களைச் செய்து விடுவார் என்ற பயத்தின் காரணமாகவே கையுயர்த்தியுள்ளனர். ஆதரித்தோர் மக்கள் நலன் தொடர்பில் சிந்திக்க மறந்துள்ளனர்.

திடீர் அனர்த்தங்கள், வறுமை நிலை ஏற்படுகின்ற வேளையில் மக்களைப் பாதுகாப்பதற்கான எந்தவொரு வழிமுறையோ இன்று எமது பிரதேசத்தை ஆட்டிப்படைக்கும் டெங்கு போன்ற உயிரச்சுறுத்தல் நோய்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில்அவைகளிலிருந்து மக்களைப் பாதுகாக்க தேவையான திட்டங்களோ வழி வகைகளோ உள்ளடக்கப்படவில்லை. அத்துடன், டெங்கு போன்ற நோய்கள் பரவக்காரணமான வடிகான்களைத் துப்பரவு செய்து, அதனைப் பராமரிக்கும் திட்டங்களோ உள்ளடக்கப்படாமை மக்களை நலனைக் கருத்திற் கொள்ளாத வரவு செலவுத்திட்டம் தரவுகளுக்கு பொருத்தமாக இருப்பினும், மக்களுக்கு நன்மையளிக்காது என்பதை முன்னிறுத்தி மேற்சொன்ன இவ்வாறான காரணங்களின் அடிப்படையில் சமூக நலனை மாத்திரம் இலக்காகக் கொண்டே எதிர்த்தோம்.

அதே நேரம் சிறு கைத்தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்து அவர்களின் வருமானங்களை மேன்மைப்படுத்தி சபையின் வருமானத்தை அதிகரிக்கத் தேவையான திட்டங்களை முன்மொழியாமை, சுகாதாரத்தை மேன்படுத்தல் போன்றஎந்தவொருவிடயமும் உள்ளடக்கப்படவில்லை. நாம் மேற்சொன்ன விடயங்களை உள்வாங்கி மீள்வாசிப்புக்கு எடுத்துக் கொள்ளுமிடத்து பிரதேச மக்களின் நன்மைகருதி அதனை ஆதரிப்போம் என்ற கருத்தையும் நாம் சபையில் முன்வைத்தோம்.

வேறு எந்தவொரு அரசியல் நோக்கங்களுக்காகவோ தனிப்பட்ட குரோதங்களுக்காகவோ நாம் அதனை எதிர்க்கவில்லை. குறித்த வரவு செலவுத்திட்டம் எமது பிரதேசத்துக்கு சமூகத்துக்கும் தேவையான பொருளாதார, சமூக அபிவிருத்தி சம்பந்தமான வேலைத்திட்டங்களை கொண்டிருக்கவில்லை என்பதில் ஏனைய உறுப்பினர்களும் தெளிவு பெற்றிருக்க வேண்டும். எமது பிரதேச அபிவிருத்தி, நலனை அடிப்படையாகக் கொண்டு திடீர் அனர்த்தங்கள் ஏற்படுகின்ற போது அதிலிருந்து மீளத் தேவையான விடயங்களை உள்ளடக்கியதான வரவு செலவுத்திட்டமே எமக்குத் தேவை என்பதை யாவரும் உணர வேண்டும்.

வரவு செலவுத்திட்டத்தினை தயாரிக்கின்ற போது பிரதேச கல்வி, சுகாதார, பின்தங்கிய கிராம முன்னேற்றம் போன்ற விடயங்களில் பிரதேசத்திலுள்ள புத்திஜீவிகள், சமூக நலன்விரும்பிகள், துறைசார்ந்தோர், பொருளாதாரத்துறை சம்பந்தமான அறிவு ஜீவிகளின் ஆலோசனைகளைப் பெற்று அதனை உள்ளவாங்கி தயாரிக்க வேண்டும் என்பதை நாம் எடுத்துக்கூறிய போதிலும், வெறுமனே ஒரு அரசியலுக்காக சபையினை நடாத்த வேண்டும் எனும் நோக்கத்திற்காக மாத்திரம் கொண்டு வரப்பட்ட வரவு செலவுத்திட்டமாகும்.

இவைகளைக் கருத்திற் கொண்டே ஓட்டமாவடி பிரதேச சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களான எம்.ஐ.ஹாமித் மௌலவி, ஏ.ஜி.அஸீஸ்/ல் றஹீம் ஆகியோர் எதிர்த்து வாக்களித்து எமது மக்கள் எமக்கு வழங்கிய ஆணையை நிறைவேற்றியுள்ளோம். மக்கள் நலன்சாராத எந்தவொரு திட்டங்களுக்கும் நாம் ஒரு போதும் ஆதரவு வழங்கப்போவதில்லை எனவும் பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

# பிரதேசத்தினை காப்பாற்ற அவசர கூட்டம்



(ந.குகதர்சன்)

கிழக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் தாக்கம்அதிகரித்து வரும் நிலையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் கொரோனா செயலணியின்கிராமமட்ட பிரதிநிதிகள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பான அவசர ஒன்று கூடல்செயலக கேட்போர் கூடத்தில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வி.தவராஜாதலைமையில் நடைபெற்ற ஒன்றுகூடலில் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக், உதவி பிரதேச செயலாளர்ஏ.சி.அஹமட் அப்கர், ஓட்டமாவடி பிரதேச சபை நிருவாக உத்தியோகத்தர் ஏ.அக்பர்,செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஏ.றியாஸ், ஓட்டமாவடி சுகாதார வைத்தியஅதிகாரி அலுவலக மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.நௌபர், ஓட்டமாவடிகோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.அஹ்ஷாப், செயலக உத்தியோகத்தர்கள், இராணுவஉயர் அதிகாரி, பொலிஸார், கொரோனா செயலணியின் கிராமமட்ட பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கிழக்கு மாகாணத்தில்கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர்பிரிவில் கொரோனா வைரஸ் தாக்கம் பரவாமல் இருக்கும் வகையில் மக்களை கட்டுப்படுத்தும்நோக்கில் மேற்கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அத்தோடு ஜனாதிபதி செயலகத்தினால்வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்திற்கமைய செயலக பிரிவில் தனிமைப்படுத்தில் உள்ளகுடும்பங்களை வாரத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திணைக்கள அதிகாரிகள் என்ற அடிப்படையில்சென்று அறிக்கையினை எவ்வாறு சமர்ப்பிக்க வேண்டும் என்றும், இவர்கள்தனிமைப்படுத்தலில் உள்ளார்களா என்று சோதனைசெய்வது தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. அத்தோடு செயலக பிரிவில் உள்ள அரசதிணைக்களங்களில் கடமையாற்றும் அரச அதிகாரிகள், பாடசாலையில் கடமையாற்றுபவர்கள் என்றஅடிப்படையில் இவர்களுக்கு பி.சி. ஆர் பரிசோதனைகள் நடாத்தப்படுவது தொடர்பிலும்தெளிவுபடுத்தப்பட்டது.

# நீர்ப்பாசன விவசாய செய்கையை விரிவுபடுத்தல்





(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் தலைமையில் நேற்று (27) மாவட்ட செயலகத்தில் காலநிலைக்கு சீர்மையான நீர்ப்பாசன விவசாயசெய்கை தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான கணபதிப்பிள்ளை கருணாகரன் ஏற்பாடுசெய்திருந்தார். இக்கூட்டத்தில் குறிப்பாக மாவட்டத்தில் 20 குளங்களை புனரமைப்பு செய்வதுடன் அதுதொடர்பான பாதைகள் வாய்க்கால்கள் கால்வாய்கள் என்பனவற்றை புனரமைப்பு செய்து வரட்சியினால் பாதிக்கப்படுகின்ற விவசாய மக்களின் பொருளாதாரத்தினை மேன்படுத்தி மக்களை பாதுகாக்கும் செயல்திட்டமாகவே இச்செயல்திட்டம் அமையவுள்ளது.

இச்செயல்த்திட்டமானது இலங்கையில் ஆறு மாகாணங்களில் 11 மாவட்டத்தில் 44 கமநல சேவைகள் நிலையப்பிரிவுகளில் 23800 மில்லியன் நிதியில் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வந்தாறுமூலை கமநல சேவைகள் நிலைய பிரிவில் 15 குளங்களும் கறடியநாறு கமநல சேவைகள் நிலைய பிரிவில் 17 குளங்களும் ஆயித்தியமலை கமநல சேவைகள் நிலைய பிரிவில் 03 குளங்களும் மெத்தம் 34 குளங்கள் அபிவிருத்தி செய்வதற்கு முன்னெடுக்கப்பட்டபோதிலும் காலதாமதம் ஏற்பட்டு வருவது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக்குழு தலைவருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் ஆராய்ந்து துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்விசேட கூட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந்த்இ நீர்ப்பாசன பணிப்பாளர் என்.நாகரெத்தினம் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்திருமதி. சசிகலா புண்ணியமூர்த்தி சம்மந்தப்பட்ட திணைக்கள உயர் அதிகாரிகள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

# ஏறாவூர் பொலிஸ் பிரிவில் நால்வர் கைது

(ஏறாவூர் நிருபர்)

எல்ரீரீஈ இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்தநாளைகொண்டாடுதல் மற்றும் மாவீரர் தினத்தை அனுஷ்டித்தல் தொடர்பான தகவல்களை முகநூலில்வெளியிட்ட நான்கு பேர் மட்டக்களப்பு- ஏறாவூர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தீவிரவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்பட்ட குற்றச்சாட்டின் பேரில் சந்தேகநபர்களாக இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக ஏறாவூர்ப் பொலிஸார்தெரிவித்தனர். நீதிமன்ற அனுமதியின்கீழ் இவர்கள் ஏறாவூர்ப் பொலிஸ் நிலையத்தில்தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படுவதாக பொலிஸார் மேலும் கூறினர்.

# கரவெட்டி வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றம்

**(வடமராட்சி)**

கரவெட்டி பிரதேச சபையின் வரவு செலவுத்திட்டம் 2மேலதிக வாக்குகளினால் வெள்ளிக்கிழமை நிறைவேறியது சபைத்தவிசாளர் த ஐங்கரன் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் தவிசாளரால் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு உறுப்பினர்களின் கருத்துக்கள் பெறப்பட்டன தொடர்ந்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. வாக்கெடுப்பின்போது ஆட்சியில் உள்ள தமிழ்த்தேசியக்கூட்டமைப்பைச் சேர்ந்த 8 உறுப்பினர்களும் ஈ.பி.டி.பிதமிழர் விடுதலைக்கூட்டணிஆகியவற்றைச்சேர்ந்த தலா3 உறுப்பினர்களும் ஐ.தே.க வைச் சேர்ந்த2 உறுப்பினர்களுமாக 16 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தார்கள். எதிராக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி சுதந்திரக்கட்சி ஆகியவற்றின் தலா 7 உறுப்பினர்களும் வாக்களித்தார்கள். மொத்தம்31 உறுப்பினர்களைக்கொண்ட இச்சபையில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினரான பொ.வியாகேசு மாத்திரம் கலந்து கொள்ளவில்லை உறுப்பினர்களின் கருத்துக்களின் போது ஆளும்கட்சி உறுப்பினரான கே பரஞ்சோதி வரவுசெலவுத்திட்டத்தைக் கடுமையாக விமர்சித்தார்

# மரம் நடுகைக்கும் தடையேற்படுத்தியதாக கவலை





**(வாஸ் கூஞ்ஞ)**

மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாவீரர்கள் துயிலும் இல்லம் அமைந்துள்ள பகுதியான அடம்பன் மற்றும் ஆட்காட்டிவெளி கிராமங்களில் நேற்று வெள்ளிக் கிழமை (27.11.2020) மரம் நடுகையை மன்னார் புனர்வாழ்வு அமையத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டபோது பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டு மரம் நடுகைக்கு தடைகள் ஏடுபடுத்தியதாக இதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இருந்தபோதும் வளவுகளுக்குள் மரங்கள் நடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் புனர்வாழ்வு அமையத்தின் ஏற்பாட்டில் மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள வீடுகள் மற்றும் தெருக்களில் ஆயிரம் தென்னங்கன்றுகள்இ பத்தாயிரம் பனை விதைகள் இரண்டாயிரம் நிழல் தரும் மரக்கன்றுகள் நேற்று வெள்ளிக் கிழமை (27.11.2020) நட்டுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு இதற்கான முன்னெடுப்புக்கள் சம்பவம் அன்று காலை பத்து மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது.

அன்றைய தினம் மாவீரர் தினத்தை வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் அனுஷ்டிப்பதனால் இவ் தினத்தை மாவீரர்கள் துயிலும் இல்லங்களுக்குச் சென்று அனுஷ்டிக்க நீதிமன்றங்கள் தடைவிதித்திருந்த நிலையில் இவ் மரநடுகைக்கும் பாதுகாப்பு படையினர் தடைவிதித்தாக தெரிவிக்கப்டுகின்றது.

காலை பத்து மணியளவில் மன்னார் புனர்வாழ்வு அமையத்தைச் சார்ந்தவர்களும் இன்னும் ஒரிருவரும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றியவர்களாக ஆரம்பத்தில் வீதியோரங்களில் மர நடுகையை ஆரம்பித்தபோது அவ்விடத்துக்கு விரைந்து வந்த பாதகாப்பு படையினர் வீதியோரங்களில் மரங்கள் நட தடைவிதித்ததாக தெரிவிக்கப்பட்டது.

இன்று மாவீரர் தினமாக இருப்பதால் இவ்வாறான செயல்பாடுகளில் இறங்க வேண்டாம் என்றும் இவ் மரநடுகையை தடைசெய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து வீதியோரங்கள் தவிர்த்து அப்பகுதிகளிலுள்ள வீடுகளிலும் பொது இடங்களின் வளாகங்களுக்கும் இவ் மரநடுகை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றில் சில மரக்கன்றுகள் மன்னார் பெருநிலப்பரப்பிலிருந்து மன்னார் தீவுக்குள் வீடுகளில் நட்டுவதற்காக கொண்டு வந்தபொழுது இவைகளை மன்னார் தீவு நுழைவாயிலில் தடுத்து நிறுத்தப்பட்டு இன்றைய நாளில் இவைகளை விநியோகிக்கவோ அல்லது நடவோ கூடாது என அவர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டே இவற்றை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படகின்றது.

மாவீரர்தினத்தை அவர்களின்கல்லறைகளுக்குச் சென்றுவர தடைவித்த்து தமிழ் மக்களுக்கு அநீதி விளைவிக்கப்பட்டதுடன் வீடுகளிலும் தெருக்களிலும் அன்றைய நாளில் மரங்களை நடவும் தடைவிதித்ததையிட்டு இவ் மக்கள் கவலை தெரிவித்தனர்.

இவ் மரநடுகை நிகழ்வில் மன்னார் புனர்வாழ்வு அமையத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார்இ மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன்இ மற்றும் மன்னார் புனர்வாழ்வு அமையத்தின் பிரதி நிதிகள் கலந்து கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# திண்மக்கழிவுகளை பசளையாக மாற்றும் நிலையம் அமைக்க தீர்மானம்

**(ஏறாவூர் நிருபர்)**

ஏறாவூர் நகர சபையின் வாவியோர வாகன தரிப்பிடத்திற்கு அருகாமையில் தனிப்பட்ட நபரினால் அபகரிக்கப்பட்டுள்ள அரசாங்க காணியை சுவீகரித்து திண்மக்கழிவுகளை பசளையாக மாற்றும் நிலையம் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதேவேளை ஏறாவூர் நகர எல்லைக்குள் உள்ள அரசாங்க காணிகளை அடையாளப்படுத்துமாறு ஏறாவூர் பிரதேச செயலாளருக்கு அறிவிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏறாவூர் நகர சபையின் 32 ஆவது உறுப்பினர் அமர்வு தவிசாளர் ஐ. அப்துல் வாசித் தலைமையில் (27.11.2020 ) வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இவ்வமர்வில் அனைத்து உறுப்பினர்களும் பிரசன்னமாயிருந்தனர். இதன்போது தனிப்பட்ட நபர்களினால் அபகரிக்கப்பட்டுள்ள அரசாங்க காணிகளை அடையாளப்படுத்துவது தொடர்பாக தவிசாளர் அப்துல் வாசித் முன்மொழிவு செய்தையடுத்து சில உறுப்பினர்களிடையே வாதப்பிரதிவாதம் ஏற்பட்டது. இங்கு தவிசாளர் அப்துல் வாசித் உரையாற்றுகையில் ஏறாவூர் நகர எல்லைக்குள் சேகரிக்கப்படும் திண்மக்கழிவுகளை கொட்டுவதற்கு இடமில்லாது அசௌகரிகம் எதிர்நோக்கப்படும் நிலையில் சில நபர்கள் வாவியோரம் பெருமளவு அரசாங்க காணிகளை அபகரித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. திண்மக்கழிவுப் பிரச்சினைக்கு இக்காலகட்டத்தில் தீர்வு காணப்படாதுபோனால் எமது எதிர்கால சந்ததியினரும் துன்பப்படவேண்டியேற்படும்.

# கேப்பாபுலவு விமானப்படை தனிமைப்படுத்தல் மையத்தில் இருந்த 8 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

**(சண்முகம் தவசீலன்)**

முல்லைத்தீவு கேப்பாபுலவு விமானப்படைத் தளத்தில் விமானப்படையுடன் தொடர்புடைய கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புடையவர்கள் என்ற அடிப்படையில் 145 பேர் தனிமைபடுத்துகின்ற நோக்கத்தோடு கடந்த 21ம் 22ம் திகதிகளில் கொண்டு வந்து தனிமைப் படுத்தப்பட்டிருந்தனர். இவர்களில் ஒரு தொகுதியினருக்கு 23.11.2020 அன்று மேற்கொள்ளப்பட்ட பி சிஆர் பரிசோதனைகளின் அடிப்படையில் இருவருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது இந்நிலையில் அவர்கள்கொரோனாசிகிச்சை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்

இந்நிலையில் இன்னும் ஒரு தொகுதியினருக்கான பி சி ஆர் பரிசோதனைகள் 24.11.2020 அன்று மேற்கொள்ளப்பட்ட நிலையில் குறித்த நபர்களில் நான்கு பேர் கோரோனா தொற்றுக்கு உள்ளாகி இருப்பது அடையாளம் காணப்பட்ட நிலையில் அவர்கள் மருதங்கேணி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்

அந்த வகையில் இன்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளின் அடிப்படையில் இன்று குறித்த பகுதியில் தனிமைப் படுத்தப் பட்டிருந்த மேலும் எட்டு பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது குறித்த 8 பேரும் மருதங்கேணி கொரோனா சிகிச்சை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்

இந்நிலையில் கேப்பாப்புலவு விமானப்படை தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்த கொண்டுவரப்பட்ட 145 பெயரில் இதுவரை 14 பேர் தொற்றுக்கு உள்ளாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது

# மட்டக்களப்பில் 90எம்.சீ.எம். நீர் கொள்ளளவினைப் பெற்றுக்கொள்ள சாத்திய வளங்கள் ஆராய்வு



**(மட்டக்களப்பு )**

முந்தனை ஆறு ஆற்றுப்படுக்கை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மட்டக்கப்பு மாவட்டத்திலுள்ள உறுகாமம் மற்றும் கித்துள் குளங்களினை இணைத்து உருவாக்கப்படவுள்ள நீர்த்தேக்கத்தினை 90 எம்.சீ.எம். ஆக உயர்த்துவதற்கான சாத்திய வளங்களை ஆராயம் விசேட கூட்டம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவனேசதுரை சந்திரகாந்தனின் பங்குபற்றுதலுடன், அரசாங்க அதிபர் கே. கருணாகரன் தலைமையில் நேற்று(27) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

பிரான்ஸ் நாட்டு அபிவிருத்தி நிறுவணம், ஐரோப்பிய ஒன்றியம் மற்றம் இலங்கை அரசின் நிதிப் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படவிருக்கும் முந்தனை ஆறு ஆற்றுப்படுக்கை அபிவிருத்தித் திட்டத்தில் உறுகாமம், கித்துள் குளங்கள் இணைத்த நீர்த்தேக்கத்திட்டம் 58 எம்.சீ.எம். ஆக உயர்த்துவதற்கான முன்மொழிவுகள் வைக்கப்பட்டு திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும் தற்பொழுது இந்நீரத்தேக்கத்தினை 90 எம்.சீ.எம். ஆக உயர்த்துவதன் மூலம் இப்பகுதியில் தற்போதுள்ள 11 ஆயிரம் நீர்ப்பசனக் காணிகளுக்கு மேலதிகமாக 14 ஆயிரத்தி 230 ஏக்கர் விவசாய காணிகளுக்கு இருபோகத்திற்கான நீர்ப் பாசனம் வழங்கமுடிவதுடன், 25 ஆயிரம் குடும்பங்களுக்கு குடிநீர் வசதிகளையும் வழங்க முடியுமாகவுள்ளது.

இந்நீர்த் தேக்கத்தினை 90 எம்.சீ.எம். ஆக உயர்துவதற்கான சாத்தியவள அறிக்கை சம்மந்தப்பட்ட திணைக்களங்களினாலும், நிபுனர் குழுவினாலும் ஆராயப்பட்டு வருகின்றதுடன் இதுவரை அவ்அறிக்கை நிறைவு பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதுதவிர இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதனூடாக சித்தாண்டி, வந்தாறுமூலை, கிரான், முறக்கட்டான்சேனை பிரதேசங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கு குறைவடைதல், விவசாய நிலங்களின் உற்பத்தி அதிகரித்தல், உப உணவுப் பளிர்ச் செய்கை அதிகரித்தல், நன்னீர் மீன்பிடி வசதி அதிகரித்தல், கால்நடைக்கிசைவான பயிர் செய்கை ஊக்குித்தல், மேச்சல்தறை வசதிகளைப் பெற்றுக் கொள்ளல் போன்ற நேரடி நன்மைகள் பெற்றுக் கொள்ளக்கூடியதாக எதிர்பார்க்கப்படுகிறது.

# 152 நபர்களுக்கு பி.சி.ஆர்பரிசோதனைகள்





**(ந.குகதர்சன்)**

வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேலெழுந்தவாரியாக வெள்ளிக்கிழமை 152 நபர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் இடம்பெற்றதாக சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர். அந்தவகையில் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் தலைமையில் வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் ஓட்டமாவடி பொதுச் சந்தை என்பவற்றில் மேலெழுந்தவாரியாக 93 நபர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் இடம்பெற்றது.

அத்தோடு கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ரீ.நஜீப்கான் தலைமையில் மேலெழுந்தவாரியாக 59 நபர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் இடம்பெற்றது.

இதன்போது மீன் வியாபாரிகள், மரக்கறி வியாபாரிகள், பழங்கள் வியாபாரிகள், இறைச்சி வியாபாரிகள், சில்லறைக்கடை வியாபாரிகள், தம்புள்ளை பகுதிக்கு மரக்கறி கொள்வனவு செய்து வந்த வியாபாரிகள், பொருட்கள் கொள்வனவு செய்த மக்கள், சமூகமட்ட தலைவர்கள் ஆகியோருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. குறித்த பி.சி.ஆர் பரிசோதனைகளில் பொதுச் சுகாதார மேற்பார்வை பரிசோதகர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இலங்கை தினசரி
மற்றும் வாரந்த
பத்திரிகைகளை
உங்கள்
மொபைலில்
பெற்றுக்கொள்ள
எம்மோடு
இணையுங்கள்

Viber இல் இணைய
இங்கே CLICK
செய்யுங்கள்

Viber

LK
Newspapers
BTamil.com

10,000+ அங்கத்தவர்கள்
மற்றவர்கள் உங்கள்
தொலைபேசி இலக்கத்தை
பார்வையிட முடியாது

Facebook இல் இணைய
இங்கே CLICK
செய்யுங்கள்

